جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# சுவனம் நுழையாத பாவிகள்

தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# சுவனம் நுழையாத பாவிகள்

1

## உறவைத் துண்டித்து வாழ்பவன்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

முறித்து வாழுபவன்  அதாவது

உறவைத் துண்டித்து வாழுபவன்

சொர்க்கத்தில் நுழைய மாட்டான்.

ஜுபைர் பின் முத்இம் (ரலி) அவர்கள், முஸ்லிம் 4996

# சுவனம் நுழையாத பாவிகள்

2

## கோள் சொல்பவன்

அபூவாயில் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

ஒரு மனிதர் (மக்கள்) பேசிக்கொள்வதை (ஆட்சியாளர்வரைக் கொண்டுபோய்) கோள் சொல்லிக் கொண்டிருக்கிறார் எனும் செய்தி ஹுதைஃபா பின் அல்யமான் (ரலி) அவர்களுக்கு எட்டியது.

அப்போது ஹுதைஃபா (ரலி) அவர்கள், ’கோள் சொல்கின்றவன் சொர்க்கம் செல்லமாட்டான் என அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன்’ என்றார்கள்.

முஸ்லிம் 168

# சுவனம் நுழையாத பாவிகள்

3

## கடுகளவும் பெருமை உள்ளவன்

நபி (ﷺ)அவர்கள் 'யாருடைய உள்ளத்தில் அணுவளவு தற்பெருமை இருக்கிறதோ அவர் சொர்க்கத்தில் நுழையமாட்டார்' என்று கூறினார்கள்.

அப்போது ஒரு மனிதர், 'தமது ஆடை அழகாக இருக்க வேண்டும், தமது காலணி அழகாக இருக்க வேண்டும் என ஒருவர் விரும்புகிறார். (இதுவும் தற்பெருமையில் சேருமா?)' என்று கேட்டார்.

அதற்கு நபி (ﷺ) அவர்கள், 'அல்லாஹ் அழகானவன், அழகையே அவன் விரும்புகின்றான். தற்பெருமை என்பது (ஆணவத்தோடு) உண்மையை மறுப்பதும், மக்களைக் கேவலமாக மதிப்பதும்தான் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள், முஸ்லிம் 147

# சுவனம் நுழையாத பாவிகள்

4

## இம்மூன்று தீய குணங்கள்

தர்மத்தை சொல்லிக் காட்டுபவன், பெற்றோரை நோவினை செய்பவன், தொடர்ந்து மது அருந்துபவன் சுவனம் நுழைய மாட்டான்" என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், நஸாயி 5688

# சுவனம் நுழையாத பாவிகள்

5

## அண்டை வீட்டாருக்கு தொல்லை தருபவன்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

எவருடைய நாசவேலைகளில் இருந்து அவருடைய அண்டை வீட்டார்க்குப் பாதுகாப்பு உணர்வு ஏற்படவில்லையோ அவர் சொர்க்கத்தில் நுழையமாட்டார்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். முஸ்லிம் 73